# தயமும் செய்யும் முறை

01. தயமும் செய்வதாக இருந்தால் இரு கரங்களையும் தூய மன்னிலடித்து பிறகு இரு கரங்களையும் ஊதிவிட வேண்டும்.

அல்லாஹ்றவின் தூதர் தன் இரு கரங்களையும் பூமியில் அடித்து அவ்விரண்டிலும் உள்ளவைகளை ஊதிவிட்டார்கள்.

(ஸஹீஹுள் புகாரி -388 )

“தன் இரு கரங்களையும் பூமியில் ஒரு முறை அடித்தார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் - 601)

“தூய்மையான் மண்ணில் தயமும் செய்யுங்கள்.

(அல்குர்ஆன் – 05: 06)

02. பிறகு இரு கரங்களையும் மணிக்கட்டுவரை தடவ வேண்டும். இடது கையினால் வலது கையின் மேற்புறத்தையும் , வலது கையினால் இடது கையின் மேற்புரத்தையும் தடவ வேண்டும். பிறகு இரு கரங்களினாலும் முகத்தை தடவ வேண்டும்.

“பிறகு அவ்விரண்டையும் கொண்டு மஸ்ஹ செய்தார்கள். அதாவது, தன் (வலது) கரத்தின் மேற்பகுதியை இடது கரத்தை கொண்டும் அல்லது தன் இடது கரத்தின் மேற்பகுதியை தன் (வலது) கரத்தை கொண்டும் தடவினார்கள். பிறகு அவ்விரண்டையும் கொண்டு தன் முகத்தை தடவினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி - 247)

மற்றுமொரு அறிவிப்பில் :

“அவ்விரண்டையும் கொண்டு தன் முகத்தையும், தன் இருகரங்களையும் மஸ்ஹ செய்தார்கள்.

(ஸஹீஹுல் புகாரி - 338)

“பிறகு தனது இடது கரத்தைக் கொண்டு தன் வலது கரத்தின் மீதும், தன் வலது கரத்தைக் கொண்டு இடது கரத்தின் மீதுமாக இரு கரங்களையும் மஸ்ஹ செய்துவிட்டு பிறகு தன் முகத்தைத் தடவினார்கள். .

(அபூதாவூத் )

“பிறகு உன் வலது கரத்தை கொண்டு இடது கரத்தின் மீதும், உன் இடது கரத்தை கொண்டு உன் வலது கரத்தின் மீதும் இடது கரத்தின் மீதும், உன் இடது கரத்தைக் கொண்டு உன் வலது கரத்தின் மீதும் , பிறகு உன் முகத்தின் மீதும் தடவுவாய்..

(அல் இஸ்மாயிலி)